3. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை மற்றும் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இருங்கள்.* (குறுக்கீடு) *விதி 110-ன்கீழான அறிவிப்புகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் நன்றி சொல்ல வாய்ப்பு கேட்டிருக்கிறார்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு அமைச்சர்கள் பேசி முடித்தவுடன், உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன்.* (குறுக்கீடு) *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையில், விதி 110-ன்கீழ் இந்நாட்டு மக்களுடைய தலைவிதியை தலைசிறந்ததாக மாற்றிக் காட்டுகின்ற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித அரசு (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கும் என்றைக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துக் கொடுத்த வழியிலே சென்று, வெற்றி வரலாற்றைப் படைக்கும் என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) அதை நிரூபித்துக்காட்டுகின்ற வகையிலே, இன்றைக்கு தாய்த் துறையான வருவாய்த் துறைக்கு பேரிடர் மேலாண்மை வெள்ளத் தடுப்புக்காக, 100 கோடி ரூபாய் அளவில் ஒரு தொலைநோக்குத் திட்டத்தை தாய் உள்ளத்தோடு வழங்கியுள்ளது. அம்மா அவர்களுடைய அரசு என்றைக்கும் மக்கள் நலத் திட்டங்களை அள்ளி வழங்குகின்ற அமுத சுரபி, (மேசையைத் தட்டும் ஒலி) அட்சய பாத்திரம் என்பதை இங்கே நிரூபித்துக்காட்டியிருக்கின்ற எங்களுடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் வருவாய்த் துறைக்கு இந்தத் திட்டத்தின் மூலமாக ஊக்கம் அளித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய துறையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

2018 ஜூன் 29]

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டு சுதந்திரத்திற்காக போராடிய தியாகிகளையும், சமுதாய மேம்பாட்டிற்காக பாடுபட்ட தலைவர்களையும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், உரிமைக்காகவும் தம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்த தமிழ்ச் சான்றோர்களையும் மற்றும் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களையெல்லாம் போற்றி பெருமைப்படுத்துவதிலும், அவர்களுடைய பெருமைகளை வருங்கால சந்ததியினர் அறிந்து பின்பற்றுகின்ற வகையில், நினைவுச் சின்னங்கள் மற்றும் மணிமண்டபங்களை எழுப்பி மரியாதை செய்வதிலும், அம்மா அவர்களுடைய அரசு இந்தியாவுக்கே வழிகாட்டியாக விளங்குகின்ற நிலையிலே உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தென்னாட்டு காந்தி என்று போற்றப்பட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய புகழுக்கு புகழ் சேர்க்கின்ற வண்ணமாக, இன்றைக்கு அண்ணா அவர்களின் நினைவிடத்தை பல்வேறு வகைகளில் புனரமைப்பு செய்து, புதுப்பொலிவுடன் அழகுபடுத்த 4 கோடி ரூபாயை வாரி வழங்கிய அம்மா அவர்களின் வள்ளல் அரசை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய துறையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை நான் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காக போராடியவரும், சமூக நீதிக்காக பாடுபட்டவருமான மறைந்த திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களைப் பெருமைப்படுத்துகின்ற வகையிலே, பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் பெறப்பட்ட நிலையிலே, அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் அந்த மாவட்ட மக்களின் சார்பாக கோரிக்கையை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இன்றைக்கு, அவர்களை பெருமைப்படுத்துகின்ற வகையிலே, திரு. ராமசாமி படையாச்சியார் அவர்கள் பிறந்த தினமான செப்டம்பர் திங்கள் 16 ஆம் நாளை ஆண்டுதோறும் அரசு விழா என்ற வகையிலே அறிவித்து, அங்கீகாரம் செய்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு மீண்டும், செய்தித் துறையின் சார்பாக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-30

சிவாஜி கணேசனைப்பற்றி சொல்கின்ற நேரத்தில், நடிகரிலே சிறப்பிடத்தைப் பெற்றவர். அவர் இந்து ராஜ்ஜியம் என்ற நாடகத்திலே பேரரசர் சிவாஜியாக நடித்து தன் திறமையை வெளிப்படுத்தியதன் காரணமாக, தந்தை பெரியார் அவர்களால் சிவாஜி கணேசன் என்று அன்போடு அழைக்கப்பட்டார். தமிழ், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் 300-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து புகழ் பெற்றவரும், நடிகர் திலகம் என்று மக்களால் போற்றப்பட்டவரும், கலைமாமணி, பத்மஸ்ரீ, பத்மபூஷன், செவாலியே, தாதா சாகேப் பால்கே ஆகிய விருதுகளுக்குச் சொந்தக்காரரும், வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் பாத்திரங்களை ஏற்று அற்புதமாக நடித்து, அவருடைய பங்களிப்பை பட்டி-தொட்டி எங்கும் எடுத்துச் சென்றவருமான மறைந்த திரு. சிவாஜி கணேசன் அவர்களின் கலைச் சேவையைப் பாராட்டி போற்றுகின்ற வகையிலே நடிகர் சங்கத்தின் சார்பாக நாங்கள் மணிமண்டபம் கட்டுவோம் என்று சொன்ன நேரத்திலே, மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்காக பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 65 செண்ட் இடத்தை 26-9-2002-ல் வழங்கி, உத்தரவிட்டார்கள். அதற்குப் பிறகு நடிகர் சங்கத்தின் சார்பாக மணிமண்டபம் கட்டப்படாத நிலையிலே, மீண்டும் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு அன்றைக்கு திரு. சிவாஜி கணேசனைப் பற்றி சிந்திக்காத வேளையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் 2011-ல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு 2015 ஆம் ஆண்டு ரூ.2 கோடி செலவில் சிவாஜி கணேசனுக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி, அந்த மணிமண்டபத்தைக் கட்டி முடித்து, கடந்த ஆண்டு 1-10-2017 அன்று அடையாறில் சிவாஜி கணேசனுக்கு மணிமண்டபத்தை மிகப் பெரிய விழாவாக, சிறப்போடு திறக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் ஆணையிட்டார்கள். நடிகர் திலகத்தின் குடும்பத்தினர் மற்றும் திரையுலக முன்னணி நட்சத்திரங்கள் அனைவரும் கலந்துகொண்டு அந்த விழாவை சிறப்பித்தார்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே அந்த விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அந்த விழாவிலே கலந்துகொண்ட அத்தனைப் பேரும் அவருக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை வைத்ததன் அடிப்படையிலே, மாண்புமிகு அண்ணன்

2018 ஜூன் 29] [திரு. கடம்பூர் ராஜு]

முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் இன்றைக்கு திரு. சிவாஜி கணேசன் அவர்களுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் சிவாஜி கணேசனுடைய பிறந்த நாள் விழாவை அரசு விழாவாக அறிவித்து அம்மா அவர்களுடைய அரசுக்கு அனைவரும் நன்றி சொல்கின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல இன்றைக்கு பத்திரிகையாளர் நலனில் அக்கறை கொண்ட அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இருக்கின்றது. கடந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை ரூ.8,000/-லிருந்து ரூ.10,000/- ஆக உயர்த்தியும், குடும்ப ஓய்வூதியத்தை ரூ.4,750/-லிருந்து ரூ.5,000/- ஆக உயர்த்தியும் வழங்கியதன் தொடர்ச்சியாக இன்றைக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்கொடையின் உச்சவரம்பு மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தியும், அவர்கள் பெறுகின்ற மருத்துவ நல உதவி ரூ.50,000/- ஆக இருக்கின்றது; எங்களுக்கு அந்த நிதியை உயர்த்தி வழங்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையிலே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதையும் ரூ.1 இலட்சமாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். இந்த அரசு, பத்திரிகையாளர் நலன் காக்கின்ற அரசு என்பதை நிரூபிக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்குத் துறையின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இன்று விதி 110-ன்கீழ், புதிய அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பில் ரூ.150 இலட்சம் மதிப்பில் பூம்புகார் நிறுவனத்தின் 4 விற்பனை நிலையங்கள் புதுப்பிக்கப்படும் என்று

[திரு. பா. பென்ஜமின்] [2018 ஜூன் 29

அறிவித்துள்ளமைக்கும், அதேபோல தமிழ்நாட்டில் கைவினைப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரித்திடவும், அன்னிய செலாவணியை ஈட்ட உதவிடும் வகையில் 200 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் உலகளாவிய கைவினைக் கண்காட்சி நடத்தப்படும் என அறிவித்துள்ளமைக்கும் துறையின் சார்பிலும், என் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்கிறீர்களா, சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ், சில அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். மிக முக்கியமாக, தமிழ்நாட்டிலே சமூக நீதிக்கு முன்னோடியாகத் திகழ்ந்த தலைவர்களிலே ஒருவர் பெருமரியாதைக்குரிய ஐயா, திரு. ராமசாமி படையாச்சியார் அவர்கள். இங்கே வருங்கால தலைமுறை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி, சீக்கிரம் நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: அவரை மறந்துவிடுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், அவருக்குச் சிறப்பு சேர்க்கும் வகையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவருடைய பிறந்த தினம் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்தது, வன்னிய சமுதாய மக்களுக்கு மட்டுமல்ல, சமூக நீதிக்காகச் செயல்படக்கூடிய அத்தனை பேருடைய உள்ளங்களிலேயும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஓர் அறிவிப்பாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, பத்திரிகையாளர்கள் மிகுந்த தவிப்பில், ஏக்கத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆறுதல் தரக்கூடிய அளவிற்கு, மகிழ்ச்சி தரக்கூடிய அளவிற்கு சில சலுகைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பத்திரிகையாளர் என்ற அடிப்படையிலே, அதற்கும் என்னுடைய நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து, அமர்கிறேன். நன்றி.